REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 18உ செவ்வாய் (4—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 19உ புதன் (5—10—55) [இதழ் 95

## மாநில புனரமைப்புக்குழு சிபாரிசுகள்

மாநில முதலமைச்சர்கள் ஆலோசனை செய்வர்

இம்மாத இறுதியில், அல்லது நவம்பர் துவக்கத்தில், மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பரிசீலனை செய்து அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகள் பற்றி ஆலோசிப்பதற்காக மாநில முதலமைச்சர்கள் மாநாடு ஒன்று நடைபெறக்கூடுமாம்.

# எத்தனை நாளைக்கு இந்தத் 'திருக்கூத்து'?

## 'புல்லேந்தி'கள் 'கலப்பை' ஏந்துகிற புதுமை!

### மிராசுதாரர்களே நிலத்தை உழ முற்படுகின்றனராம்!

திருச்சி, அக். 2—

புல்லேந்திகளான பார்ப்பனர்கள் கலப்பை ஏந்துகிற புதுமையான காட்சி திருச்சி மாவட்டத்தில் உள்ள அந்த நல்லூர் கிராம மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

கடந்த ஜூன் திங்கள் முதல் இந்த கிராமத்தில் உள்ள மிராசுதாரர்களுக்கும்—பெரும்பாலானோர் பார்ப்பனர்கள்—விவசாயிகளுக்குமிடையில் குடிவாரம் சம்மந்தமாகத் தகராறு நீடித்து வருகிறது; அதன் விளைவாக, ஏற்கனவே குறுகிய கால 'குறுவை' பயிரிட முடியாது போய்விட்டதாலும், தகராறு தொடர்ந்து நீடிப்பதினாலும் நீண்டகால சம்பா பயிருக்கும் 'பட்டம்' நெருங்கிவிட்டதாலும், தாங்களே நிலத்தில் இறங்கி உழுவது என்று முடிவுக்கு வந்த மிராசுதாரர்கள் கடந்த செப்டம்பர் 29-ந் தேதியன்று, ஏர் கலப்பை சகிதம் நிலத்தில் இறங்கி உழ முற்பட்டனராம்.

இந்தப் 'புதுமை'யான காட்சியை கிராம மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்திருக்கின்றனர்.

மிராசுதாரர்கள் தங்கள் நிலத்தைப் பயிரிடுவதைத் தடுக்க விவசாயிகள் முற்படக்கூடாதெனவும், முற்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திருச்சி மாவட்ட நிர்வாக உதவி அதிகாரி எச்சரிக்கை விடுத்திருப்பதுடன், ஆயுதந் தரித்த போலீசாரையும், கிராமத்தில் நிறுத்திவைத்திருக்கிறாராம்!

## விடுதலை வேகம் கண்டு விழிப்பு?

அரசியல் சீர்திருத்தம் வழங்குவதில் விரைவு

கிழக்கு ஆப்ரிக்காவிலுள்ளதும் இரு தீவுகளைக் கொண்டதுமான ஜான்சிபார், பிரிட்டிஷ் பாதுகாப்பில் இருக்கிறது; அதன் மொத்த பரப்பளவு 1,020 சதுரமைல்; மக்கள் தொகை 2,65,000; உலகிலேயே இங்குதான் 'கிராம்பு' அதிகமாக உற்பத்தியாகிறது.

'விடுதலைக் கீதம்' ஒலிக்கு முன்னரே, இத்தீவுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்குவதற்கு பிரிட்டன் முனைந்துவிட்டது.

உடனடியாகப் 'பிரிவி கவுன்சில்' ஏற்படுத்துவது, உத்தேச சீர்திருத்தங்களில் முக்கியமானது; ஜான்சிபார் சுல்தானுக்கு இக்கவுன்சில் ஆலோசனை கூறும்.

---

நடப்புப் பருவத்தில் மொத்தம் 15,86,000 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டிருப்பதன் மூலம் சர்க்கரை உற்பத்தியில் நாட்டில் ஒரு புதிய உச்சம் அடையப்பட்டிருக்கிறது. இவ்வருட உற்பத்தி 1951—52ல் ஏற்பட்ட உச்ச உற்பத்தியளவைவிட 87,000 டன் அதிகம்.

## காந்தியார் பிறந்த நாள் விழா...

### தேபர் பேசிய கூட்டத்தில் 'குழப்பம்'!

பாட்னா, அக். 2—

காந்தியார் பிறந்த நாளை முன்னிட்டு, பீகார் பிரதேசக் காங்கிரஸ் கட்சி சார்பில், காந்தி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் தேபர் பேசுகையில் பெரும் குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டு, 50 நிமிடங்களுக்கு மேலாக நீடித்து, கூட்டம் அமைதியாக நடைபெற முடியாதநிலை ஏற்பட்டதாகத் தேசிய ஏடுகள் தெரிவிக்கின்றன.

"யார் என்ன குழப்பம் செய்தாலும்—கூவினாலும், நான் இங்கேயே இரவு முழுவதும் வேண்டுமானாலும் நின்றுகொண்டிருப்பேன்; நான் சொல்ல வேண்டும் என்று விரும்புவதைச் சொல்லாமல் திரும்பிப் போகமாட்டேன்" என்று வீராப்புப் பேசியிருக்கிறார்.

"பீகார் மக்களுக்கும், மாணவர்களுக்கும் சில குறைகள் இருப்பது எனக்குத் தெரியும்; தவறுகள் இருந்திருக்கலாம்—ஆனால், 'மறப்போம் — மன்னிப்போம்' என்ற மனம் வேண்டும்,"

என்று, தேபர் கூறிக்கொண்டிருந்தபோது,

'அண்மையில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்பற்றி என்ன சொல்கிறீர்கள்?'

என்று கூட்டத்திலிருந்து குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

உடனே தேபர், 'அண்மையில் நடந்த சம்பவங்களை மறந்துவிடுங்கள்; சர்க்கார், ஒரு நீதிமுறை விசாரணைக்கு ஏற்பாடு செய்திருப்பதின் மூலம் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டிருக்கின்றனர் என்றே நினைக்கிறேன்,' என்று குறிப்பிட்டார்.

உடனே கூட்டத்தில் கூடியிருந்த மக்கள் தேபரின் கூற்று தங்களுக்குச் சரியான சமாதானமல்ல என்று கருதியதால் மீண்டும் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

பல சட்ட சபை காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்திலிருந்தவர்களை அமைதிப்படுத்த முயற்சித்தபோது, அவர்களுக்கு 'உதை' கொடுத்து மக்கள் அனுப்பினர் என்றும் தேசிய ஏடுகள் தெரிவித்திருக்கின்றன.

தேபர் மீண்டும் கூறியிருக்கிறார்—"குழப்பம் செய்வதும், கூச்சல் போடுவதும் ஒரு சம்பூனிஸ்டு நாட்டில் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதை உணரவேண்டும்; கோஷங்களில் மயங்கி பலாத்காரத்தில் ஈடுபடுவது நல்லதல்ல"—என்று!

## காங்கிரசாருக்கு வாய்ப்பூட்டு!

### நிர்வாகம் பற்றி கண்டிக்கக் கூடாதாம்

"காங்கிரஸ் கமிட்டிகளோ, தனிப்பட்ட காங்கிரஸ்காரர்களோ பகிரங்கமாக சர்க்காரைக் கண்டிப்பதோ, பத்திரிகைகளில் எழுதுவதோ கூடாது,"

என்று, அ. இ. கா. கமிட்டி, ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

அன்றாட நிர்வாக அலுவல்களை, அமைச்சர்கள், எந்தவிதக் குறுக்கீடும் இல்லாமலும் தாராளமாகவும் கவனிக்க வேண்டியது அவசியமென, அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

நியமனங்கள், உத்தியோக உயர்வுகள், மாற்றங்கள், நீக்கங்கள் ஆகியவற்றிலும், எவ்விதத் தலையீடும் கூடாதென வற்புறுத்தப்பட்டிருக்கிறதாம்.

உள்ளாட்சித்துறை அதிகாரிகள் பற்றி ஏதாவது புகார்கள் இருந்தால் கூட, அலுவலகத் தலைவருக்கோ, அல்லது முதலமைச்சருக்கோ அனுப்பவேண்டுமே தவிர, அதுபற்றி எந்த முறையிலும் கண்டிக்கக் கூடாது எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

## 'மறு — இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன்'

### மத்திய ஆட்சியினர் திட்டம்

புதுடில்லி, அக். 3—

ரூ. 6 கோடி மூலதனத்தில், 'மறு-இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன்' ஒன்றை நிறுவுவதற்கு இந்திய சர்க்கார் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. மூலதனத்தில் மூன்றில் இரண்டு பங்கை இந்திய சர்க்கார் செலுத்துமாம். இந்த யோசனையை, மற்ற இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் வரவேற்கவில்லையாம்!

# இந்தியாவில் வேறுபாடுகள் பல உண்டாம்!

## 'ஒற்றுமை'யும் இருக்கிறதாம்!

### 'நமக்குள் சண்டைகள் ஏன்?'

### தென்னாட்டில் பண்டித நேருவின் சாகசமும், சரித்திரப் புரட்டும்!

"நாம் 'ஒற்றுமை'யுள்ள மக்களாக இருந்தால்தான்—நாம் ஒன்று சேர்ந்து செயலாற்றினால்தான்—சிக்கல்களை எதிர்நோக்க அஞ்சாமலிருந்தால்தான், நம்மைப் பிரித்துவைக்கிற எத்தனையோ வேறுபாடுகளை ஒழித்துக் கட்டினால்தான்—நாம் தீட்டுகிற 'ஐந்தாண்டுத் திட்டங்கள்' போன்ற திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்."

"இந்தியாவின் 'ஒற்றுமை'யில்தான் இந்தியாவின் பலம் இருக்கிறது; இந்தியாவின் வடக்கிலோ, தெற்கிலோ, கிழக்கிலோ, மேற்கிலோ, நாம் எங்கு வாழ்வதாயினும், எல்லோரும் ஒன்றுதான்—முன்னேறினாலும் ஒன்றாக முன்னேறுவோம்—வீழ்ந்தாலும் எல்லோரும் வீழுவோம்—என்பதைத்தான் நாம் நினைவில் கொள்ள வேண்டும்"

"இந்த நாட்டிலே அநேக 'இராஜ்யங்கள்' இருந்திருக்கின்றன; பல மதங்களும், மொழிகளும், நம்பிக்கைகளும் இருந்திருக்கின்றன; என்றாலும்—இத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், நாம், ஒற்றுமைப்பட்ட ஒரு நாட்டவராக இருந்துவருகிறோம்—'இந்தியக் குடியரசு' மக்களாக விளங்குகிறோம் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்; எனவே, மத வேறுபாடுகளோ, மாநில வேறுபாடுகளோ, மொழி வேறுபாடுகளோ, நாம் 'ஒற்றுமை'யாகச் செயல்படுவதற்கு குறுக்கில் நிற்க அனுமதிக்கக்கூடாது."

"இந்தியா கற்றுத்தரும் பாடம்தான் என்ன? அதுதான், சமாதானமும், பொறுமையுமாகும்; இந்தியாவில் பல நம்

(4-ம் பக்கம் பார்க்கவும்)

## மருத்துவ நலனுக்கு தாராள உதவி!

பிரிட்டிஷ் மோட்டார் உற்பத்தியாளரும், கோடீசுவரருமான ஒப்பீல்டு பிரபு மாதர்களின் மருத்துவ உதவிக்காக 1,25,000 பவுன் நன்கொடையளித்துள்ளார்.

***

தலைமைக் கழகம்: அறிக்கை—30/55

## சித்தூர் மாவட்ட தி. மு. க. கிளைத் தேர்தல்

★

சித்தூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளைத் தேர்தல் 16—10—55 ஞாயிறன்று பிற்பகல் 2 மணிக்குச் சித்தூர் மாதா கோவில் தெரு, தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்திவைப்பார்.

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகளின் மாவட்டப் பிரதிநிதிகள், தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப் பெறும் உரிமைச் சீட்டுடன் தேர்தலில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்',
சென்னை-13
4—10—55

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

***

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 4—10—'55 செவ்வாய்

# எந்த நாகரீகம்?

"ஆப்பிரிக்கச் சிறுவன் ஒருவனை இரண்டு வெள்ளை இராணுவ அதிகாரிகள், சாலை ஒன்றிலிருந்து காடுகளிடையே உள்ள புதர் ஒன்றுக்கு அழைத்துச் சென்று சித்திரவதை செய்து, பகிரங்கமாகச் சுட்டுக்கொன்றனர்!"

இந்தச் சம்பவம், கடந்த 1955 செப்டம்பர் 20-ந் தேதி நடைபெற்றிருக்கிறது.

"மாவ் மாவ் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரை உருகிய—கொதிக்கும் மெழுகில் தோய்த்து, வேக வைத்துத் திக்கிரையாக்கினர்—ஒரு வெள்ளை இராணுவ அதிகாரி!"

இது, கடந்த 1954 பிப்ரவரி திங்களில் நடைபெற்ற சம்பவம்!

"பதினெட்டு வயதான ஆப்பிரிக்கப் பெண் ஒருத்தியைத் துடிக்கத் துடிக்கச் சவுக்காலடித்து, உயிரோடு பலகை ஒன்றில் ஆணிகளால் அறைந்து, இரத்தம் சொட்டச் சொட்ட நடுத் தெருவில் காட்சிக்கு வைத்திருந்தனர்—வெள்ளை இராணுவத்தினர்!"

வெள்ளையர்கள், ஆப்பிரிக்க நாட்டில் தங்களுக்கிருக்கும் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எத்தனை கொடூரமானவை—மனிதத்தன்மையற்றவை என்பதை எடுத்துக் காட்டுகிற எத்தனையோ சம்பவங்களுள், இவையும் சில!

சாலையிலிருந்து புதருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்படுவதற்கு அந்த ஆப்பிரிக்கச் சிறுவன் செய்த குற்றந்தான் என்ன?

கொதிக்கும் மெழுகில் வாட்டி வதைக்கப்பட்டு, திக்கிரையாக்கப்படுவதற்கும், உயிருடன் இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்ததைப்போல், பலகையில் ஆணி கொண்டு அறைந்து, துடிக்கத் துடிக்கக் காட்சிப் பொருளாக வைக்கப்படுவதற்கும் அவர்கள் என்ன பெரிய குற்றம் புரிந்துவிட்டனர்?

அவர்கள் புரிந்த குற்றமெல்லாம், 'ஆப்பிரிக்காவிலிருந்து வெள்ளையரே வெளியேறுக!' என்று உரிமைக் குரல் எழுப்பி, போர் புரிந்துவரும் 'மாவ் மாவ்' இயக்கத்துடன் தொடர்புகொண்டனர் — விடுதலை கோரினர் என்பதுதான்!

'நீ கறுப்பன்—நான் வெள்ளையன்' என்று நிறத் திமிர் பேசுவதுமட்டுமின்றி, 'உனக்கு ஆளத் தெரியாது—நீ நாகரிகமற்றவன்' என்று வேறு கேலி பேசி, அவர்களை அடக்கி ஆளும் வெள்ளையர்கள், தங்கள் ஆதிக்கம் நீடித்து நிலைப்பதற்காக, ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல் எழுப்புவோரை ஈவு இரக்கமின்றி நூற்றுக்கணக்கில் சிறைப்படுத்துதல், சுட்டு வீழ்த்துதல் போதாது என்று, எதுமறியாத சிறுவர்களை—இளம் பெண்களைச் சித்திரவதைக்கு ஆளாக்குகின்றனர்,

இப்படிக் கொடுமைகள் புரிவதின்மூலம் சுதந்திரம் கோரும் மக்களின் மனதை மாற்றிவிடலாம் என அவர்கள் எண்ணுகின்றனர்போலும்! அப்படியாயின், அவர்கள் வெகு அவலமான ஏமாற்றத்திற்கு ஆளாவர் என்பது திண்ணம்.

"கெனியாவில் உள்ள 'மாவ் மாவ்' இயக்கத்தினர் பயங்கரவாதிகள்—கொள்ளையடிக்கின்றனர்—கொலை செய்கின்றனர்—வெள்ளையர்களைத் தாக்குகின்றனர்" என்று வர்ணிக்கும் வெள்ளையர், ஆப்பிரிக்கர்களை, 'நாகரிகமில்லாதவர்கள்-காட்டுமிராண்டிகள்' என்று பேசுகின்றனர்!

"நாகரிகம் பெற்றவர் நாங்கள்; ஆகவேதான், உங்களின் பாதுகாப்புக்காக உங்களை ஆளுகிறோம்" என்று பெருமை பேசித் திரிகின்றனர்!

எதுமறியாத சிறுவர்களைச் சித்திரவதை செய்வதும், அனல் பட்டு உருகும் மெழுகில் வாட்டி வதைப்பதும், இளம் பெண்களை பலகையில் அறைந்து காட்சிப் பொருளாக்கித் துடிக்க வைப்பதும் எந்த நாகரிகத்தின்பாற்பட்டது? எந்த மனித உள்ளத்தால் சரி என ஒப்புக்கொள்ளக்கூடியது?

நாகரிகம் பெற்றவர் என்று கூறிக்கொள்ளும் வெள்ளையர் தங்கள் அநியாயமான ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்வதற்காக இத்தகு கொடூரமான—மனிதாபிமானமற்ற சித்திரவதைகளை மேற்கொள்ளும்போது, தாங்கள் 'அடிமைகள்' என்று கூறப்படும் நிலையை மாற்றுவதற்காக — நாகரீகம் பெறாதவர்கள் என ஏசப்படும் 'மாவ் மாவ்' இயக்கத்தவர் வெள்ளையரைத் தாக்குவதும், படுகொலை செய்வதும் எந்த வகையில் தவறானவை என்று தான் விடுதலை விரும்பிகள் கேட்பர்.

## இந்திய நிலக்கரி மீது ஜப்பான் 'கவனம்!'

கல்கத்தா, செப். 29—

நீண்ட காலத்திற்குப் பின்னர், இந்தியாவின் நிலக்கரி பற்றி ஜப்பான் இப்போது ஆவல் காட்டுகிறது.

இந்தியாவிலிருந்து ஆகஸ்டில் ஏற்றுமதியான 75,000 டன்களில், ஜப்பான் 6,800 டன்களை வாங்கியுள்ளது.

இந்திய நிலக்கரியை இப்போது அதிகமாக வாங்கும் நாடுகள் பர்மா, இலங்கை மற்றும் சில தென்கிழக்கு நாடுகளாகும்.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறதாம்!

திரு-கொச்சி சட்டசபையில், புரட்சிச் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் டி. கே. திவாகரன், திரு-கொச்சி அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்போவதாக 'முன்னறிவிப்பு' கொடுத்துள்ளார். அக். 5-ந் தேதியன்று தீர்மானம் கொண்டுவரப்படக்கூடுமாம்.

# எலிகளால் ஏராளமான உணவுப் பொருள் நஷ்டம்

புதுடில்லி, அக். 1—

"ஒரு ஆண்டில் நூறு எலிகள் 27 மனுங்கு உணவுப் பண்டங்களைச் சாப்பிட்டுவிடும்; அதுமட்டுமல்ல நஷ்டம்—எலி உண்ட பண்டத்தில் பெரும் பகுதியும் பாழாகும்—எலிகள் உண்ணுவதைப் போன்று எட்டு அல்லது பத்து மடங்கு உணவுப் பொருள்கள் பாழாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது;

"எனவே, உணவுப் பொருள்களின் சுயதேவைப் பூர்த்தியைப் பொறுத்து, சரியான முறையில் அவை சேகரித்துப் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியமும் இருக்கிறது,"

என்று, இந்திய உணவு இலாகா அதிகாரி ஒருவர் வானொலியில் இந்தியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், உணவுப் பண்டங்களை எலிகள் பாழாக்காமல் தடுப்பது எப்படி என்பதையும் தெரிவித்திருக்கிறார். சில பல யோசனைகளையும், வழிகளையும் கூறியுள்ளார்.

## பர்மியக் குடி உரிமை கோருகின்றனர்

பத்தாயிரம் இந்தியர்கள் மனு

பரிசிலனை செய்வதற்கு இரு நீதிபதிகள் நியமனம்

ரங்கூன், அக். 1—

பர்மியக் குடிஉரிமை கோரி சுமார் 10,000 பேர் மனுச் செய்திருக்கின்றனராம்.

"பர்மாவில் உள்ள இந்தியர்கள், நேப்பாளிகள், சீனர்கள் ஆகியோர் பர்மியக் குடிஉரிமை கோரிச் செய்துள்ள மனுக்களைப் பரிசீலித்துப் பைசல் செய்வதற்காக இரண்டு நீதிபதிகள் நியமிக்கப்படுவர்"

என்று, பிரதமர் நூ தெரிவித்திருக்கிறார்.

## திரு - கொச்சி வாக்காளர் எண்ணிக்கை

50 லட்சம் என மதிப்பிடு

திருவனந்தபுரம், அக் 3—

இறுதியாக வெளியிடப்பட்டுள்ள பட்டியல்படி, திரு—கொச்சி மாநிலத்தில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 47,97,795 ஆகும்; கடந்த 1954-ல் நடைபெற்ற தேர்தலின்போது, அங்கிருந்த வாக்காளரின் எண்ணிக்கை, 44,26,253 ஆகும்.

இந்த விபரங்களை வாக்காளர் பதிவு இலாகா அதிகாரிகள் இன்று வெளியிட்டிருக்கின்றனர்.

அடுத்த ஆண்டு திருத்தி அமைக்கப்படும்வரை இந்த பட்டியலே அமுலில் இருக்கும்; இந்தப் பட்டியல்கள்தான், நகரசபை, பஞ்சாயத்து சபைத் தேர்தல்களுக்குப் பயன்படும் என்று தெரிகிறது.

## நெருப்புடன் 8 மணி நேரம் 'போராட்டம்'

1,300 நெருப்பணைக்கும் படையினர் பங்கேற்றனர்

டோக்கியோ, அக். 1—

இங்கிருந்து 100 மைல் வடக்கேயுள்ள பஸ்ட்லின் நகரில் கோரத் தீ விபத்து ஏற்பட்டு சுமார் 1,000 வீடுகளை கருக்கிச் சாம்பலாக்கிவிட்டிருக்கிறது.

எட்டு மணி நேரம் கொழுந்து விட்டெரிந்த தீயை, 1,300 நெருப்பணைக்கும் படையினர் போராடி கட்டுப்படுத்தியிருக்கின்றனர்.

"சுமார் 1,117பேர் வீடிழந்தனர்—155 பேர் காயம்பட்டனர்—990 வீடுகள் நாசமாயின," என்று போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

பெரும் புயல் ஒன்று வீசியதின் விளைவாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாம்.

புயல் வேகம் தணிந்துள்ளபோதிலும், வேறொரு புயல் ஜப்பானின் மேற்குக் கடல் பகுதியில் உருவாகிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

யுத்தத்திற்குப் பிறகு, இத்தனை பெரிய தீ விபத்து இதுதான் என்றும் கூறப்படுகிறது.

## ஏப்படி மந்திரிகளாயிருக்கின்றனரோ?

புதுடில்லி, அக். 1—

இந்தியாவில் மக்கள் தொகை அதிகரிக்கிறது என்று கூறுவது வெறும் பூச்சாண்டியா?

இந்தியப் பேரரசின் மந்திரிகள் இருவர், இதுபற்றி நேர்முரணை பதில் தருகின்றனர்.

ஒருவர், 'வெறும் பூச்சாண்டி' என்கிறார்; மற்றவர், 'உண்மையில் மக்கள் தொகை வளருகிறது' என்கிறார்.

எப்படி இருவரும் ஒரே சர்க்காரில் மந்திரிகளாயிருக்கின்றனரோ, அதுதான் நமக்குத் தெரியவில்லை!

சர்க்காரின் விவசாயக் கொள்கையை விளக்கிப் பேசிய டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக், 'சிலர் இந்தியாவில் மக்கட்தொகை அதிகரிப்பதாக தேவை இல்லாத பூச்சாண்டி காட்டுகின்றனர்; நான் பிறப்பு—இறப்பு பட்டியல்களைப் பார்வையிட்டேன்; சில ஆண்டுகளாகப் பிறப்பும், இறப்பும் குறைந்துவருகின்றன' என்று கூறியுள்ளார்.

பின்னர் விவாதத்திற்குப் பதிலளித்த உணவு மந்திரி ஏ. பி. ஜெயின், 'வேகமாக வளர்ந்துவரும் மக்கட்தொகை, கவலையைத் தருகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## காலங் கடந்த இயந்திரங்கள்!

இந்தியத் துணித் தொழிலில் இருக்கும் நிலைமை

ஜினீவா—

"இந்தியத் துணித் தொழிலில் காலங் கடந்த இயந்திரங்களே இருக்கின்றன; உற்பத்திச் செலவைக் குறைக்கவும், உயர்ந்த 'தரமுள்ள' பொருள்களைத் தயாரிக்கவும் முற்படுவதற்குப் பழங்கால இயந்திரங்களை மாற்றியமைக்க வேண்டும்; வேலையின்மை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தினாலேயே, சிக்கனச் சீரமைப்புக்கு எதிர்ப்பு இருந்து வருகிறது," என்று, சர்வதேசத் தொழில் நிறுவனத்தின் துணிக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில், ஆமதாபாத் மில் சொந்தக்காரர்கள் சங்கத் துணைத் தலைவர் கூறியுள்ளார்.

### எண்ணிக்கை தருகிறார்

அதே கூட்டத்தில் பேசிய எஸ் நரசிம்மன் என்பவர் பேசுகையில், இந்தியாவில் 250 துணித் தொழிற்சாலைகள் இருப்பதாகவும், 10 இலட்சத்திற்கும் அதிகமாகத் தொழிலாளர்கள் அவைகளில் பணியாற்றுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

"துணித் தொழில், கைநூட்பத் தொழில் தொழிலாளர்கள் உட்பட 25 இலட்சம் பேருக்கு வேலை கிடைப்பதற்கு வழி செய்தாக வேண்டியுள்ளது," என்றும் அவர் கூறினார்.

## குடிசைத் தொழில்கள் அபிவிருத்திக்குத் திட்டம்

மரங்களைப் பதனிடும் முறைக்கு ரூ. 1,50,000 மானியம்

புதுடில்லி, அக். 1—

சென்னை மாகிலத்தில் மரங்கள், மூங்கில்கள், பிரம்பு ஆகியவைகளைப் 'பதம்' செய்வதற்கு, ஒரு 'சூளை' கட்ட சர்க்கார் அனுமதியளித்து, ரூ. 1 50,000 மானியமாக அளித்திருக்கின்றனர்.

இதனால் பதம் செய்யப்பட்ட பொருள்களைக்கொண்டு, குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி அடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பதம் செய்யும் முறைகளும் இயந்திரமும் டேராடூனிலுள்ள வன ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. பதம் செய்யப்பட்ட மரங்களும், மூங்கிலும், பிரம்பும் நீடித்து உழைப்பதுடன், மெருகிடவும், அலங்கார வேலைகள் செய்யவும் உதவியாக இருக்கும்.

## மாநிலங்களுக்கு டில்லி 'தாக்கீது'

மாநில புனரமைப்புக் குழு அறிக்கையின் எதிரொலி

புதுடில்லி, அக். 1—

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை வெளியானதும், தகராறுகள் ஏற்படலாமென்று கருதப்படும் பிரதேசங்களில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யும்படி சென்னை, ஆந்திரா, மைசூர் ஆகிய மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் 'தாக்கீது' அனுப்பியுள்ளதாம்.

## ஆரம்பக் கல்விக் குழு சிபாரிசுகள் அறிக்கை

சர்க்காரிடம் தரப்பட்டது

சென்னை, அக் 2—

சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஆரம்பக் கல்விக் குழு, தனது சிபாரிசுகள் கொண்ட அறிக்கையை, கல்வி மந்திரி சுப்பிரமணியம் அவர்களிடம் தந்துவிட்டது குழுவின் சிபாரிசுகள், விரைவில் பரிசீலனை செய்யப்படுமென அமைச்சர் கூறினார்.

## ஆரம்ப நடவடிக்கை: 5,000 பேருக்கு வேலை

"பிலாய் உருக்குத் தொழிலைக்காக மேற்கொள்ளப்படும் சில ஆரம்ப நடவடிக்கைகளுக்காக, 1955—56-ம் ஆண்டில், 5,000 பேர் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்," என்று, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் டி. டி. கே தெரிவித்துள்ளார்.

## குடும்பமொன்றுக்கு 30 முதல் 50 ஏக்கர் நிலம்!

பீகார் மாநிலத்தில், ஐந்து பேர்கள் கொண்ட குடும்பமொன்று சமவெளிப் பிரதேசத்தில் 30 ஏக்கர் நிலமும், மலைப் பிரதேசத்தில் 50 ஏக்கர் நிலமும் வைத்துக்கொண்டிருக்கலாமென மசோதா ஒன்று சர்க்காரால் கொண்டுவரப்படுமாம்.

## அனுவசியமாக நாயை உதைத்ததற்கு அபராதம்

தெருவில் திரிந்து கொண்டிருந்த நாய் ஒன்றை, வேண்டுமென்றே அனுவசியமாக உதைத்ததுடன், அதற்கு இம்சையும்உபாதையும் ஏற்படுத்தியதற்காக திரு. புன்வாணி என்பவருக்கு, பம்பாய் மாஜிஸ்திரேட்டால், ரூ 20 அபராதம் விதிக்கப்பட்டது. நாய் எதும் செய்யாமலிருக்கையிலேயே அதைத் துன்புறுத்தியதாக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## நில உடைமைக்கு வரம்பு

அதிகபட்சம் 25 ஏக்கர்!

"மீன் வளர்ப்புக் குட்டை, வீட்டு மனை நீங்கலாக—அதிகபட்சமாக ஒருவர் 25 ஏக்கர் நிலம்தான் வைத்துக்கொண்டிருக்கலாம்," என்ற சர்க்காரின் நிலச் சீர்திருத்த மசோதாவிலுள்ள முக்கிய பிரிவு மேற்கு வங்க சட்டசபையில் நிறைவேறியுள்ளது.

# வளங் கொழிக்கும் வடநாட்டில் மின் அணு நிலையம் உருவாகிறது!

## வாழ்க்கையின் தோற்றத்தை மாற்றும் ஆற்றல் வாய்ந்ததாம்!

பாலைவனம் பரந்துகிடக்கும் இராஜஸ்தானில் பிலானி என்னும் பெயர் விளங்காத சிற்றூர் ஒன்றில் மணற்குன்றில் மாளிகை ஒன்று எழும்புகிறது; அது ஒரு ஆராய்ச்சி நிலையம்; மின் அணுத் துறையில் (எலக்ட்ரானிக்ஸ்) அது ஆராய்ச்சி நடத்தும்.

நாடு நெடுக மத்திய அரசாங்கம் ஏற்படுத்திவரும் ஆராய்ச்சி நிலையங்களுள் பன்னிரெண்டாக உள்ள இந்நிலையத்தில் நடக்கப் போகும் ஆராய்ச்சிகள், இனி இந்நாட்டின் புதிய தொழில்கள் எவ்வாறு அமையும் என்பதை முடிவு செய்யும்.

இந்திய வாழ்க்கையின் தோற்றத்தை மாற்றும் ஆற்றல்வாய்ந்த இந்த மத்திய மின் அணு எஞ்சினீயரிங் ஆராய்ச்சிக் கழகத்துக்கு ஈடும், இணையும் இந்நாட்டிலும் இல்லை—கீழ்நாடுகளிலும் இல்லை.

மணலில் எழுப்பிய மாளிகையானாலும், இவ்வாராய்ச்சிக் கழகத்தின் அடிப்படை பலமானது. மின் அணு விஞ்ஞானம் பிறந்த இடமாகிய அமெரிக்காவில் இந்த 49 ஆண்டுகளாக இத்துறையில் ஏற்பட்டுள்ள அறிவும், ஆராய்ச்சியும் இக்கழகத்துக்கு ஆணி வேர் போன்றுள்ளன.

டாக்டர் என். பி பட் என்பவர், இந்த ஆராய்ச்சிக் கழகத்துக்குத் திட்டம் அமைக்கும் அதிகாரியாக இருந்து வேலையைக் கவனித்து வருகிறார்.

இந்த ஆராய்ச்சிக் கழகத்தின் சாதனங்களில் பெரும் பகுதி, அமெரிக்காவிலிருந்து விரைவில் வந்து சேரும்; அதற்கென அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்பு மிஷன் $2\frac{1}{2}$ லட்சம் டாலர் கொடுத்திருக்கிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசாங்கம் இதற்கு ரூ 25 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது

சேத் கன்ஷியாம்தாஸ் பிர்லாவும் இக்கழகத்துக்கு ரூ 21 இலட்சம் நன்கொடையாக வழங்கி, மேலும் ஆண்டுதோறும் ரூ 50,000 வழங்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அடுத்த ஜனவரிக்குள் கழகம் கட்டி முடிக்கப்பெறும் என எதிர்பார்க்கிறார்கள்.

மின்அணுக் கலை என்றால் என்ன?

அணுவினுள் மின்சாரமுள்ள மிக நுண்ணிய பொருள் மின் அணு; மின் அணுக்களை அடக்கி நமக்குப் பணியவைக்கும் கலையே மின் அணுக் கலை. மின் அணுக் கருவிகளால் காணவும், கேட்கவும், சுவைக்கவும், தொட்டு உணரவும், நினைவில் வைக்கவும், அளக்கவும், எண்ணவும், பேசவும் முடியும்.

டெலிபோன், டெலிகிராப், டெலிடைப், டெலிவிஷன், ஒலி பரப்புதல், ஒலிப்பதிவு, பேசும் படம், ராடார் முதலிய தற்கால மின்சாரச் செய்திப் போக்குவரத்துச் சாதனங்கள் யாவும் மின் அணுக் கலையினால் தோன்றினவையாகும்.

'இயந்திர மூளைகள்' என்றும், 'கணக்குப் போடும் கருவிகள்' என்றும் சொல்லுகிறார்களல்லவா? இன்று 'மின்னணு மூளை'கள் கணக்குப் போடுகின்றன; கணக்கற்றச் செய்திகளை 'நினைவில்' வைத்திருந்து வெளியிடுகின்றன.

பிழை சிறிதும் இன்றி ஒரு நொடியில் கணக்குத் தீர்த்துச் சொல்லும் மின்அணுக் கருவிகள், அமெரிக்காவில் இன்று, பல கம்பெனிகளிலும், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களிலும் பயனாகின்றன.

★

### 'மின் அணு வேலைக்காரன்'

வைத்தியத் துறைக்கு மின் அணு விஞ்ஞானம், அரும் பெரும் சேவை செய்யும் என்பதும் நிச்சயம்.

வீட்டில் குழந்தையைப் பார்த்துக்கொள்ளவும், திருடர் நுழைந்தால் போலீசுக்குத் தகவல் கொடுக்கவும், 'பிறந்த நாட்கள் எப்பொழுது வரும்' என நினைவுப்படுத்தவும், மின்சாரம், டெலிபோன் முதலிய செலவு கணக்குகளைச் சரிவரக் கூட்டிச் சொல்லவும், மின்சாரக் கருவிகளைத் தானே வேலை செய்விக்கவும், திறுத்தவும் இவை எல்லாவற்றையும் செய்யக்கூடிய 'மின் அணு வேலைக்காரன்' எனும் சாதனத்தைப் பற்றி அண்மையில் இலண்டனில் விவாதிக்கப்பட்டது. இந்த 'வேலைக்காரன்' 1990-ம் ஆண்டில்தான் வேலைக்குக் கிடைப்பான் எனக் கருதுகிறார்கள்.

"பிரிட்டன்மீது ஜெர்மனி ஏவிவிட்ட விமானங்களைத் தடுக்கவும், நீர் மூழ்கிக் கப்பலின் சூழ்ச்சிகளை நீக்கவும், நேச நாடுகள் தாக்குவதற்கேற்ற திசையறியவும், ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் நேசப் படைகள் இறங்குவதற்குத் துணை செய்யவும் 'ராடார்' என்னும் கருவி பயன்பட்டது; இது, மின்அணுக் கலையின் விளைவேயாகும்,"

என்று, இந்த ஆராய்ச்சிக் கழகத்தின் அடிப்படைக் கல்நாட்டு விழாவில் சொற்பெருக்கு ஆற்றிய காலஞ் சென்ற டாக்டர் எஸ். எஸ். பட்நகர் எடுத்துரைத்தார்.

## இந்திய நிலப் படத்தில் காஷ்மீர்

### கராச்சியில் எதிர்ப்பு

கராச்சி, அக். 1—

பாகிஸ்தான் மூன்றாவது தொழிற் கண்காட்சியில் உள்ள இந்தியப் பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் இந்திய நிலப்படத்தில், ஜம்மு, காஷ்மீர் பகுதிகள் இந்திய எல்லைக்குள் அமைந்திருப்பன என்று குறிக்கப்பட்டிருப்பதால், இந்தியப் பிரிவை 'பகிஷ்காரம்' செய்யவும், அதன் முன் மறியல் நடத்தவும் போவதாக கராச்சியில் உள்ள 'ஐக்கிய காஷ்மீர் விடுதலை முன்னணி'யினர் அச்சுறுத்தியிருக்கின்றனராம்.

'நிலப்படம் உடனடியாக திருத்தப்படவேண்டும்—அல்லது, திரும்பப் பெறப்படவேண்டும்; இன்றேல் கடைமுன் மறியல் துவங்கும்,' என்று முன்னணியினர் தெரிவித்திருக்கின்றனர்!

தங்கள் பிரிவில் எவரும் குறுக்கிடுவதை இந்தியா அனுமதிக்காதென்றும், வேண்டுமானால் குறுக்கீட்டை எதிர்த்து கண்காட்சியில் உள்ள தங்கள் பிரிவுக் கடையை மூடிவிடுவர் என்றும் இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றனவாம்.

## இந்தியப் போலீசாரால் 51-பேர் கைது

பம்பாய், அக். 2—

கோவாவிலும், டாமனிலும் சத்தியாக்கிரகம் செய்யும் பொருட்டு, அணிவகுத்துச் சென்ற நிராயுதபாணிகளான தொண்டர்களை இந்தியப் போலீசார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இந்தியா—கோவா எல்லைக்கருகில் பந்தா என்ற பகுதியில், 51 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனராம்.

## 'விடுதலைப் போருக்கு தயாராகுக!'

### நாட்டு மக்களுக்கு நவசீன அமைச்சர் அறிவிப்பு

அக். 1-ந் தேதியன்று, சீன மக்கள் குடியரசின் 6-வது ஆண்டு விழாவையொட்டி, பிரம்மாண்டமான அணிவகுப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

5 இலட்சம் பேர் கலந்துகொண்ட அந்த அணிவகுப்பை சீன மக்கள் குடியரசின் தலைவர் மா-சே-துங் பார்வையிட்ட பின் பாதுகாப்பு அமைச்சர் மக்களுக்கு உத்திரவிடுகையில் சொன்னார்:—

"பார்மோசாவை விடுதலை செய்வது, சீன மக்களின் புனிதக் கடமை; ஒரு அவசரப் போராட்டத்திற்கு மக்கள் தயாராக வேண்டும்; மிக்க விழிப்புடனிருங்கள்; புது ஆயுதங்களில் நல்ல பயிற்சி பெறுவதில் முன்னேறுங்கள்; இராணுவ, அரசியல் பயிற்சிகளில் உன்னிப்பாக இருங்கள்."

## 'பொம்மை சுல்தான்' வெளியேற்றம்!

டான்ஜியர், அக். 2—

'விலகமாட்டேன்' என்று கூறி வந்த பிரெஞ்சுக்காரரின் பொம்மை சுல்தானான பென் அராபா, சிம்மாசனத்தை விட்டு இறங்கி, இங்கு வந்துள்ளார் என்று தெரியவருகிறது.

பிரான்சு, தனது அரசியல் 'சீர்திருத்தங்'களை அமுல் செய்வதற்கு, 'சுல்தான் பதவியினின்றும் விலகமாட்டேன்' என்று பென் அராபா கூறிவந்தது தடையாயிருந்தது நினைவிலிருக்கலாம்.

### ஒழுங்கற்ற இளைஞனுக்கு 'புதுமைத் தண்டனை'!

ஜபல்பூர்,—

ஒரு பெண்மணியிடம் தவறான முறையில் நடந்துகொண்ட இளைஞன் ஒருவனுக்கு, ஜைன பஞ்சாயத்து, 'புதுமையான தண்டனை' ஒன்று விதித்துள்ளது; கட்டுப்பாட்டுடன் வாழ்க்கை நடத்துவதற்காகவே அந்த இளைஞனுக்கு அத்தகைய 'தண்டனை' விதிக்கப்பட்டதாம்!

அப்பெண்மணியின் காலைத் தொட்டு, 'என் சகோதரி' என்று அழைக்குமாறு பணிக்கப்பட்டதுடன், கோயில் ஒன்றுக்கு அவன் அழைத்துச் செல்லப்பட்டு, சமூகத்தில் இனி ஒழுங்காக நடந்துகொள்வதாகப் 'பிரமாணம்' எற்குமாறும் செய்யப்பட்டானாம்.

# கழகச் செய்திகள்

### பெங்களூர்—பிளாக்பள்ளி தி. மு. கழகம்

25—9—55 காலை $10\frac{1}{2}$ மணிக்கு சாந்தி சவுக் வீதியிலுள்ள மிட்லாண்டு மனையில், தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், அரசாங்க அடக்கு முறையை எதிர்த்து, 24-8-55-ல் சிறை சென்று மீண்ட தோழர் ஏ. டி. பிரான்சிசைப் பாராட்டியும், தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்களது தந்தையார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், செயலாளர் தோழர் ஜே. எஸ். நாதன் தமது பதவியிலிருந்து விலகி செயற்குழு உறுப்பினராக மட்டும் இருப்பதாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அனுமதி தந்தும், தோழர் ஜி. எப். லூயிசைச் செயலாளராகவும், தோழர் ஏ. டி. பிரான்சிசை தற்காலிகத் துணைச் செயலாளராகவும், தோழர் ம. பாலன் அவர்களைப் பொருளாளராகவும் தேர்ந்தெடுத்தும், தி. மு. கழகச் சார்பில் நடத்தப்படும் இலவச இராப்பள்ளி நிர்வாகியாகத் தோழர் சுந்தரராசனையும், கழக நிர்வாகியாக தோழர் அன்பன் அவர்களையும் தேர்ந்தெடுத்து முடிவு செய்யப்பட்டது

### தொட்டம்பாளையம் தி. மு. கழகம்

25—9—55 இரவு 8 மணியளவில் தோழர் சி. கே. வெங்கிடராமன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்ட வரவு-செலவு கணக்கு சரிபார்த்து மீதமுள்ள தொகை, கிளைக் கழகப் பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சந்தா வசூலிப்பவராகத் தோழர் ஆர். எஸ் மணி தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியாகத் தோழர்எஸ். மணி சொற்பொழிவாற்றினர்.

### திருப்பூர் தி. மு. கழகம்

25—9—55 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தி. மு கழக 7-வது ஆண்டு விழா, மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழாக் கூட்ட வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டன.

### கீளூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

25—9—55ல், பெங்கால் மட்ட 'நம் நாடு' மைதானத்தில் தோழர் கே. ராமன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் எஸ். அய்யூப் கழகக் கொடியேற்றி வைத்த பின், தோழர்கள் எல். கக்கமல்லன், கோவைச் செழியன், இ. மாதன், கா. பேப்பன், தோழியர் அருள்மொழி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### குடந்தை தி. மு. கழகம்

குடந்தை நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் 25—9—55 மாலை 7 மணிக்கு, துவரங்குறிச்சி பஜனை மடத்தில் நடைபெற்றபோது, 30-10-55ல், குடந்தைக்கு வருகைதர இருக்கிற அண்ணா அவர்களைக் கொண்டு வட்டார தி. மு. க. கிளையான இளைஞர் தமிழ் மன்றக் கட்டிட நிதிக்காக சிறப்புக்கூட்டம் நடத்துவது என்றும், வசூல் குழுத் தலைவர்களாகத் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ் எஸ். கோவிந்தசாமி ஆகியோரை தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது. பின், தோழர் எஸ். பெரியசாமி செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகலை ஏற்றுக்கொண்டும், தோழர்கள் டி. ஜே. ராஜலிங்கம், பா. கோதண்டபாணி ஆகியவர்களை செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கியும் தீர்மானிக்கப்பட்டது.

### இராசிபுரம் தி. மு. கழகம்

25—9—55 மாலை 3 மணிக்கு தோழர் பி. சின்னண்ணன் தையல் கடையில் தோழர் இரா. தேசி தலைமையில் நடைபெற்ற நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 11—9—55ல் நடைபெற்ற சிறப்புக் கூட்ட வரவு-செலவு பரிசீலிக்கப்பட்டது. பின்னர், மாவட்டக் குழு, நகர கழகத்திற்கு ஒதுக்கிய பங்குத் தொகை போக மீதிபுள்ள பணத்துடன், பலரிடம் நன்கொடை வாங்கி கழகத்திற்கு நிரந்தரமாகக் கட்டிடம் வாங்குவதெனவும், மாவட்டக் கழகத் துணைச் செயலாளரின் கடிதம் பரிசீலிக்கப்பட்டதுடன், சிறப்புக் கூட்ட மீதிப் பணத்தை கழக வளர்ச்சிக்காக,கழகக் கட்டிடம் ஒன்று வாங்க இருப்பதால், அதற்காக இப்பொருளை ஒதுக்கித் தருவதோடு நன்கொடையும் அளிக்கவேண்டுமென மாவட்டக் கழகத்தைக் கேட்டுக் கொண்டும் தீர்மானிக்கப்பட்டது.

### செங்கமேடு தி. மு. கழகம்

25—9—55ல் பெண்ணாடத்தில் விருத்தாசலம் வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் தொ. பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்றது. வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர், தோழர் தி. கொ. சிங்காரம், மற்றும் பல தோழர்கள் பிரச்சாரக் குழு அமைப்பதின் அவசியம் குறித்துப் பேசினர். பின்னர் தோழர் தொ. பிச்சைமுத்துவைத் தலைவராகக் கொண்ட ஒரு பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டதுடன், மற்றும் பல முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### சின்னதாராபுரம் தி. மு. கழகம்

திருச்சி மாவட்டம் சின்னதாராபுரம் தி. மு. கழகக் கிளையின் நிர்வாகிகள் வருமாறு: செயலாளர்: ப. இராமலிங்கம்; துணைச் செயலாளர் எஸ். ஏ ஆதி; பொருளாளர்: டி. கே. பெரியசாமி; மாவட்டப் பிரதிநிதி: ஆர். எல் சண்முகம்.

# செய்திச் சுருள்

★

### சென்னை 16-வது வட்ட பொதுநல ஊழியர் சங்கம்

2—10—55ல் பொம்புலையர் தெரு, எண். 3 இல்லத்தில், மேற்படி சங்கம் துவக்கப்பட்டது. திரு. இ. நாராயணன் தலைவராகவும், தோழர்கள் சி. பஞ்சாட்சரம், பி. எஸ். சர்மா, டாக்டர். சுந்தரராஜ். எம். கே. பரசுராம் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், தோழர் எம். கே. நாகேந்திரன் சேர்மெனாகவும், ஆர். எஸ். கன்னையா பொதுச்செயலாளராகவும், தோழர்கள் ஏ. வரதராசன், என். இ ஆறுமுகம் ஆகியோர் துணைச் செயலாளர்களாகவும், தோழர் வி. ஆர். நாராயணசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் 39 பேர்கள் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### மணமேடு விவசாயிகள் கழகம்

24—9—55ல் மணமேடு விவசாயிகள் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது அதுபோது தோழர்கள் மு. இரா. பிச்சை, எம். பி. தங்கராசு ஆகியோரை முறையே தலைவராகவும், செயலாளராகவும் கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

### மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர் கழகம்

27—9—55ல் மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர் கழகப் பொது உறுப்பினர் கூட்டம், நகர தி. மு கழக அலுவலகத்தில், தோழர் ஞா. தியாகஅரசு தலைமையில் நடைபெற்றது. தோழர் உதப் அவர்களைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின், திராவிட நாடு பிரிவினை நாள் விழா வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டபின், கழகச் சட்ட திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### 'அழிவுப்பாதை'—நாடகம்

சிவகாசி—சத்திரப்பட்டி வள்ளுவர் நாடக மன்றச் சார்பில் 'அழிவுப்பாதை' நாடகத்தை விரைவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. செலவுகளனைத்தையும் முக்கூடல் த. பி சொக்கலால் ராம் சேட் பீடிக் கம்பெனியார் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளனராம்.

## தஞ்சையில் நேரு சாகசம் (1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கலும் கொண்டவர்கள் ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மையுடன் ஒன்றாக வாழ்ந்து வந்திருக்கிறோம்; எனவே, சகிப்புத் தன்மையை மனதில் இருத்தி, அரசியலில் வகுப்பு வாதத்தையும் கலந்து, அது இந்தியாவின் 'ஒற்றுமை'க்கு அறிவு தெரியாமல் செய்யக்கூடாது; அவ்வாறு செய்வது, இந்திய சரித்திரத்திற்குத் துரோகமிழைப்பதாகும்;

"சகிப்புத்தன்மை என்பது, இந்தியா கற்றுத்தரும் பாடம் மட்டுமல்ல—நாகரிகம் கற்றுத்தரும் பாடமும் அதுதான்!

"நாம் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டால் நமது இலட்சியம் ஈடேறுவது எப்படி?

"நாம் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதில் நமது ஆற்றல் பாழாகும்;

"இந்திய மக்கள் மிக நல்லவர்கள்; புத்திசாலிகள்; ஆனால், ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக் கொள்வர்; அதனால், அவர்கள் பலவீனப்பட்டு விடுவதினால், மற்றவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்—என்று, இந்திய சரித்திரம் கற்றுத் தரும் பாடத்தையும் மறந்துவிடக்கூடாது; மறுபடியும் அந்த நிலைக்கு நாம் ஆளாகிவிடக்கூடாது; நம்மிடையே உள்ள வேறுபாடுகள் நமது 'ஒற்றுமை'க்குக் குறுக்கே நிற்க அனுமதிக்கக் கூடாது,"

—என்று பிரதமர் பண்டித நேரு அவர்கள் தஞ்சை நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

# கோவிலுக்குள் நுழைவதற்கு தாழ்த்தப்பட்டோருக்கு எதிர்ப்பு

## ஜைனர்களுடன் மோதல்: 6 பேருக்குக் காயம்

புதுடில்லி, அக். 2—

பகத் அமீன்சந்த் என்ற டில்லி மாநில சட்டசபை உறுப்பினர், சுமார் 300 தாழ்த்தப்பட்ட தோழர்களை அழைத்துக்கொண்டு பழைய டில்லியில்உள்ள ஜெயின் திகம்பர் கோவிலுக்குள் நுழைவதற்காகச் சென்றபோது, அங்கு கூடியிருந்த சில ஜைனர்கள், தாழ்த்தப்பட்டவர் கோயிலுக்குள் நுழையக் கூடாதென தடுக்க முயன்றபோது இருசாராரும் மோதிக்கொண்டதின் விளைவாக ஆறு பேர்களுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது.

காந்தியார் பிறந்த தினத்தன்று தாங்கள் ஜைனக் கோவிலுக்குள் நுழையப் போவதாக ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மக்கள் அறிவித்திருந்தனர்.

அதன்படி அவர்கள் ஊர்வலமாக வரும்போது சில ஜைனரப் 'பிரமுகர்கள்' கோவிலுக்குள் அவர்கள் நுழையக் கூடாதெனத் தடுத்திருக்கின்றனர்.

தாழ்த்தப்பட்டவர்கள் பிடித்துக் கொண்டு சென்ற மூவர்ணக் கொடியை யாரோ பறித்துக் கிழித்து விட்டதாகவும் கூறுகின்றனர்.

பின்னர் போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று அமைதியை நிலைநாட்டினர் என்று கூறப்படுகிறது.

### காஷ்மீர் பிரச்சினையில் காலதாமதமாம்!

### 72 மணி நேரம் உண்ணாவிரதம் ஆரம்பமாம்!

லாகூர், செப் 3—

காஷ்மீர் பிரச்சினையில் காலதாமதம் ஏற்படுவதை ஆட்சேபித்து, அப்துல் மஜீத் சித்திக் என்பவர், பாகிஸ்தானிலுள்ள இந்தியத் துணை ஹைகமிஷனர் இல்லத்தின் முன்பு 72 மணி நேர உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளாராம்.

பாகிஸ்தான் பஞ்சாப் முஸ்லிம் லீகு நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் அவர் ஒரு உறுப்பினராம்!

### மாணவர்கள் கிளர்ச்சி நின்றுவிட்டது

அலகாபாத், அக். 3—

கடந்த 12 நாட்களாக உண்ணாவிரதம் போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டுவந்த அலகாபாத் மாணவர்களின் ஆர்ப்பாட்டம், மாணவர் நடவடிக்கை குழுவின் முடிவுக்கிணங்க நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. செப் 21-ந் தேதி முதல் உண்ணாவிரதமிருந்துவரும் ஒரு சட்ட மாணவரும், இம்முடிவையொட்டி தன்னுடைய உண்ணாவிரதத்தை நிறுத்தி விட்டார்.

### இந்தியாவுக்கு சிரியா ஆதரவு

டமாஸ்கஸ், அக் 3—

கோவா பற்றி இந்தியாவுக்கும்—போர்ச்சுகலுக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறுகள் பற்றிய பிரச்சினை சர்வதேச அரங்குகளில் விவாதிக்கப்பட நேரிட்டால், இந்தியாவுக்கு முழு ஆதரவும் அளிப்பதற்குத் தயாராக இருப்பதாக சிரியா சர்க்கார், இந்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறதாம்.

# டாக்டர் லோகியா காணும் திட்டம்

### கட்சி நிலை பற்றி விளக்கம்

ஐதராபாத் (டெக்கான்)—

7 ஆண்டுகளில்ஆட்சியைக் கைப்பற்றும் தமது கட்சித் திட்டத்தைப் பற்றி டாக்டர் லோகியா விவரமாக எடுத்துரைத்துள்ளார்.

"அடுத்த 7 ஆண்டுகள் ஒரு ஆபத்தகாலமாக இருக்கும்; அந்தக் காலத்தில் கட்சியானது 3,000 கட்சி அலுவலக நபர்களையும், 3,000 கமிட்டி மெம்பர்களையும், கட்சியின் கவுன்சில்களுக்கான 3 இலட்சம் உறுப்பினர்களையும், 30 இலட்சம் கட்சி உறுப்பினர்களையும் திரட்டி பயிற்சி தரும்.

"மாநில, மத்திய சர்க்கார்களைப் புரட்சிகரமான ரீதியில் திறம்பட நடத்திச் செல்லக்கூடிய 3,000 சட்டசபை உறுப்பினர்களையும், மக்கள் சபை உறுப்பினர்களையும் இப்பயிற்சியின் மூலம் பெறலாம்," என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"முதல் ஆண்டின்போது, சோஷலிஸ்டு கட்சி 1,000 அலுவலக நபர்கள், 10,000 கமிட்டி உறுப்பினர்கள், ஒரு இலட்சம் கவுன்சில் உறுப்பினர்களுடன் ஆரம்பமாகும் என்று எண்ணுகிறேன்; பிறகு 7 ஆண்டுகளில் கட்சியானது 4-லிருந்து 5 கோடி வரை வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றதாக இருக்கும்;

"இந்திய அரசியலுக்குத் தேவையானவை 5 கொள்கைகள்: (1) சோஷலிசம்; (2) சமத்துவம்; (3) அதிகாரம் பரவலமுறை; (4) அஹிம்சை; (5) ஜனநாயகம்;

"கமிட்டி உறுப்பினர்கள் ஒரு ஆண்டில் இரண்டு மாதமாவது சிறையில் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்; நியாயமற்ற சட்டங்களை எதிர்க்கும் நபர்களை ஆதரிக்கும் வரும்போது, நியாயமான சட்டங்களை மதிப்பார்கள் என்பது எனது கருத்து."

# 'கதவடைப்பு அநியாயம்'

## 'நீதி நிலைக்க ஆதரவு தருக'

'உற்பத்தி வீழ்ச்சி, பொருளாதார நெருக்கடி நிலை, ஆலையைச் சீர்குலைக்கத் தொழிலாளர்கள் முயற்சி என்ற காரணங்களைக் கூறிக்கொண்டு, 'இந்துஸ்தான் ரோலிங் மில்ஸ்', 'மைசூர் பிரீமியர் உலோகத் தொழிற்சாலை' நிர்வாகிகள், ஆலையின் ஒரு பிரிவான 'ரோலிங்' ஆலையை கடந்த செப் 19-ந் தேதி முதல் மூடிவிட்டிருக்கின்றனர்;

'தொழிற்சாலைப் பிரிவு மூடப்பட்டதினால் சுமார் 175 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்;

"தொழிற்சாலையை மூடுவது குறித்து எந்தவித முன்னறிவிப்பும் செய்யாதது மட்டுமின்றி, தொழிலாளர்களை வேலையில் இருந்து முறைப்படியும் நீக்கவில்லை;

"கூலி உயர்வு, போனஸ் முதலியவை சம்பந்தமாக தொழிலாளர்களுக்கும்—நிர்வாகிகளுக்கும் இருந்துவந்த தகராறு சென்னை சர்க்காரின் தொழிலாளர் இலாகா அதிகாரியின் மத்தியஸ்தத்தில் இருந்து வருகிறது;

"இந்த நிலையில் நிர்வாகிகள், திடீரென தொழிற்சாலைப் பிரிவை மூடியது சட்டவிரோதமான செய்கையாகும்;

"தொழிலாளரின் கோரிக்கைகள் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்வதற்காக நிறுவனத்தின் உரிமையாளருள் ஒருவர், சென்னைக்கு வந்து, கடந்த செப்டம்பர் 9, 10, 11, 17-ந் தேதிகளில் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்; உற்பத்தியைப் பொறுத்தமட்டில் பேச்சுவார்த்தைகளின் போது, ஒரு முடிவு காணப்பட்டது; கூலி உயர்வு, போனஸ் முதலிய சிக்கல்கள் குறித்து முடிவு எதும் காணப்படமுடியவில்லை;

"தொழிற்சாலையை மூடுவதற்கு முன்தினம் வரை—அதாவது, 17-ந் தேதி வரை—தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவிட்டு, 19-ந் தேதியன்று திடீரெனத் தொழிற்சாலைப் பிரிவை மூடியிருப்பது எப்படி நியாயமாகும்? கடைசி நாள் பேச்சுவார்த்தையின்போதுகூட, நிர்வாகிகள், தொழிற்சாலையை மூடுவதைப் பற்றி எந்தவித அறிவிப்பும் சூசகமாகக் கூடத் தரவில்லை; மேலும் தொழிற்சாலையில் அழிவு வேலையில் தொழிலாளர்கள் ஈடுபட்டதாக இன்று குற்றஞ்சாட்டுகிற நிர்வாகத்தினர், தொழிற்சாலையை மூடுவதற்கு முந்தின நாள் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது ஒரு சிறு குறிப்பும் இதுபற்றித் தெரிவிக்கவில்லை; இப்படி அவர்கள் குற்றஞ் சாட்டுவதின் மூலம், தொழிற்சாலைப் பிரிவை மூடிய தங்களின் சட்டத்திற்கு விரோதமான செயலுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிக்கிறார்கள் என்பதைத் தவிர வேறென்ன?

'தொழிற்சாலைப் பிரிவை அவசர அவசரமாக மூடியதற்குள்ள ஒரே காரணம், அவர்கள் விதித்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படவும், சென்னை சர்க்கார் தொழிலாளர் இலாகாவிடம் எழுப்பப்பட்டுள்ள தகராறு பற்றிய வழக்கைத் திரும்பப் பெறவும், தொழிலாளர் பிரதிநிதிகள் மறுத்து விட்டதுதான்;

"தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமானவற்றிற்காகக் கோரிக்கை எழுப்பினால், அவர்களைப் பழிவாங்கும் நோக்குடன் நடந்து கொள்ளும் இந்த நிர்வாகிகளின் போக்கைக் கண்டிப்பதின் மூலம் பொது மக்களும், இதாரும், பாதிக்கப்பட்ட 175 தொழிலாளர்களுக்கும் நீதியும் நியாயமும் கிடைக்கச் செய்ய வேண்டுகிறோம்,"

என்று, அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர் சங்கத்தின் செயலாளரான தோழர் ஆர். கோவிந்தசாமி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

# நிர்மாணத் துறையில் சாதுக்கள் ஈடுபடுவர்!

### டிசம்பரில் மாநாடு: நிலைமைகள் ஆராய்வு

### கோயில் சொத்துக்கள் நிர்மாணத் துறைக்குப் பயன்படும்?

ஆமதாபாத்—

"நாட்டில் 80 இலட்சத்திற்கு மேல் உள்ள சாதுக்களை நாட்டின் புனருத்தாரணத்திற்கும், மக்களின் ஒழுக்க மறுமலர்ச்சித் துறைகளிலும் ஈடுபடுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு டிசம்பர் மாதத்தில் ஒரு சாதுக்கள் மாநாடு நடைபெறும்" என்று பிரபல சமய, சமூகத் தலைவரான சாது துக்தோஜி மகாராஜ் குறிப்பிடுகிறார்.

இம்முயற்சியில் தாங்கள் ஒத்துழைப்பதாகப் பல சாதுக்கள் உறுதி கூறியிருக்கின்றனராம்.

'இந்தியக் கோயில்களில் ஏராளமான அளவில், செல்வம் குவிந்து கிடக்கின்றது; இவைகள் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் வீணாக உள்ளன; முடியுமானால், இந்தச் செல்வத்தைப் பொது நன்மைக்குப் பயன்படுத்துவது சாதுக்களின் வேலைகளில் ஒன்றாக இருக்கும்.

"சமய நலன்கள் பாதிக்காத வகையில் கோயில் செல்வங்களை நாட்டின் நிர்மாணத்துறைகளுக்குச் சீனா பயன்படுத்த முடிந்திருக்கும் போது, இந்தியாவிலும் நாம் ஏன் செய்யக்கூடாது?—அதுபற்றி ஆலோசிக்கக்கூடாது?" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சென்னை மாவட்ட தி. மு. கழகக் கிளைத் தோழர்கட்கு

"கழக அலுவல்கள் சம்பந்தமாக மாவட்டக் கழகத்துடன் தொடர்புகொள்ளும் கிளைக் கழகத் தோழர்கள், இராயபுரம் 'அறிவகத்'தில் நாள்தோறும் மாலை 5 முதல் 7 மணி வரை (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) மாவட்ட நிர்வாகிகளைச் சந்திக்கலாம்,"

என்று, சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

### சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

அக் 4 பொள்ளாச்சி
5 போடிநாயக்கனூர்
6 கோவை
7 சென்னை—கான்ரான்ஸ்மித் நகர்
8 சென்னை-நாடகத் தலைமை
9 சென்னை—ஆள்வார் பேட்டை
16 சித்தூர்

### குறள் வகுப்பு

5—10—55 இரவு 8 மணிக்கு சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோவில் தெருவிலுள்ள வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் கி. தியாகராசன் அவர்களால் குறள் வகுப்பு நடைபெறும்.

### ரப்பர் டயர், டியூப்களின் விலைகள்

திருத்தியமைக்குமாறு மத்திய சர்க்கார் கோரிக்கை

புதுடில்லி, அக். 3—

நியாயவிலை அடிப்படையில், காப்பு வரிக் கமிஷன் சிபாரிசு செய்துள்ளபடி கச்சா ரப்பரின் விலையை அனுசரித்து ரப்பர் டயர், டியூப் ஆகியவைகளின் விலைகளைத் திருத்தியமைக்குமாறு, டயர் கம்பெனிகளை, மத்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

# அனுமந்தையா என்ன செய்யவிருக்கிறார்?

# கோலார் தங்கவயல்கள் தேசீயமயமாகுமா?

## பலாபலன்களை ஆராயவேண்டுமென மத்திய ஆட்சிபீடம் வற்புறுத்துகிறதாம்!

கோலார் தங்கவயல்களை தேசிய மயமாக்குவதென்ற முடிவை நிறைவேற்றியே தீருவதென மைசூர் சர்க்கார் உறுதி கொண்டிருந்த போதிலும், அதுபற்றி இறுதியாக முடிவு செய்யு முன்பு, அவ்வாறு மேற்கொள்ளப்படுவதினால் ஏற்படும் பலாபலன்களைத் தீர ஆராய வேண்டுமென மத்திய ஆட்சியினர் யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

மைசூர் முதலமைச்சர் அனுமந்தையாவும், இந்திய உள்நாட்டமைச்சர் பந்தும், இதுபற்றி புதுடில்லியில் விவாதித்தார்களாம்.

"மைசூர் சர்க்காரின் இந்த உரிமையை யாரும் ஆட்சேபிக்கவில்லை; எனினும், தற்போது அவ்வாறு மேற்கொள்ளப்படுவது அவசியமா என்பதுதான் முடிவு செய்யப்பட வேண்டிய பிரச்சினையாகும்; தங்கம் வெட்டியெடுப்பதில் இந்தியாவுக்குப் போதிய அனுபவமோ, தொழில் நுணுக்க அறிவோ ஏற்படாமலிருக்கையில், இவ்வாறு செய்யப்படவேண்டுமா என்பதுபற்றி சிந்திக்க வேண்டும்; ஆகவே, இப்போது தங்கவயல் கம்பெனிக்காரர்கள் கொடுக்கும் பகுதி பணத்தை (ராயல்டி) 5 சதவிகிதத்திலிருந்து $7\frac{1}{2}$ சதவிகிதமாக உயர்த்தினால், தற்போது அதைப் பெற்றுக்கொண்டு திருப்தி அடையலாம்," என்று, மைசூர் சர்க்காருக்கு டில்லி ஆட்சிபீடம் யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது. இந்த யோசனையை மைசூர் சர்க்கார் ஏற்காவிடில், தேசியமயமாக்கும் திட்டத்தைச் சிறந்த முறையில் எப்படி நிறைவேற்றுவது என்பதற்கான யோசனைகளை, மத்திய ஆட்சிப்பீடம் கூறக்கூடுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர். இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.